ஸ்ரீ:

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை வார்ஷிக மஹாஸங்கம்.

ஸ்ரீ வை[illegible]ஸித்தாந்த ஸபையின் வார்ஷிக மஹா ஸங்கத்தை இவ்வருஷம் சென்ற மாசி மாதத்திலேயே கோயமுத்தூரில் நடத்தலாமென்று ஆரம்பத்தில் உத்தேசமிருந்தது. அவ்வூர் வாஸிகள் சிலர் இதில் ஆரம்பம் முதல் உத்ஸாஹிகளாக இருந்தும் பகவத் ஸங்கல்பம் அநுகூலிக்கவில்லையாதலால் அது விக்நிதமாயிற்று. ஆகையால் நாளது ஆனிமீ 26, 27-ந் தேதிகளில் திருச்சி ஜில்லா வேலூரில் ஸபையின் மஹா ஸங்கத்தை நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ. வை. ஸி. ஸபை நிர்வாகக்கமிட்டி அங்கத்தவரான வேலூர் ஸ்ரீ. உ.வே. கே. டி. பார்த்தஸாரதி அய்யங்கார் ஸ்வாமி ஸபை ஸம்பந்தமான ஏற்பாடுகளைச் செய்வதாக க்ருபையுடன் திருவுள்ளம் பற்றியிருக்கிறார். மஹாஸங்க ஸம்பந்தமான மற்ற விவரங்கள் அடுத்த ஸஞ்சிகையில் வெளியிடப்படும்.

காரியதர்சி,

ஸ்ரீ. வை. ஸி. ஸபா.

...பாலால்—ரத்ன, தங்க, வெள்ளி நகை வியாபாரிகள்
216, சைனுபஜார் ரோட், சென்னை.

Regd. No. M. 916.

॥ ஸ்ரீ: ॥

வேதாந்த தீபிகை.

ஸம்புடம் 19] சுக்ல௵ வைகாசிமீ [ஸஞ்சிகை ௮.

ஸம்பாதகர்:— ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

வருஷ சந்தா ரூ. 3.] May, 1929. [ஸஞ்சிகை 1-க்கு அணா 6

ஸ்ரீ:

விஷய ஸூசிகை.

1. ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீ அழகிய சிங்கர்:—புத்தங்கோட்டகம் ஸ்ரீ. உப. வித்வாந் ஸ்ரீநிவாஸாசார்யர். 205

2. ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்—ஸ்ரீ. உப, வித்வாந் ஏ. வி. கோபாலாசார்யர் எம் ஏ. பி. எல். 108

3. ஸ்ரீராமாநுஜாசார்யரும் ஸ்ரீகண்டாசார்யரும் ஸ்ரீ. உப. வித்வாந். தோட்டாலம் வேணுகோபாலாசார்யர் ... 223

4. ப்ராஹ்மணர்களின் தற்கால ஸ்திதி:—ஸ்ரீ. உப. வித்வாந் தட்டை ஸ்ரீநிவாஸாசார்யர் 228

5. ஸம்பாதகீயம்:— 331

6. ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம்:—ஸ்ரீ உப. வாஸுதேவாசார்யர் ... 241

7. ஸ்ரீ பரிகா விஜயம்:—ஸ்ரீ உப. வித்வாந் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர் 41

வைரங்கள்.

T. B. MEHTA & SONS,

DIAMOND MERCHANTS,

453, Mint Street, P. T. Madras

Phone No. 3555.

4 JUL 1929

॥ ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: ॥

வேதாந்த தீபிகை.

ஸம்பாதகர்:—வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸர்புடம் 19]   சுக்லஹு வைகாசிமீ   [ஸஞ்சிகை 8

[illegible] ।
[illegible] ॥

[ஸ்ரீ பாகவதம். 1-9-23]

ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ அழகிய சிங்கர்.

(புத்தன்கோட்டகம் ஸ்ரீ. உப. வித்வான் ஸ்ரீநிவாஸாசார்யர்.)

ஸ்ரீமதஹோபில மடத்தில் 41-வது ஆஸ்தானத்தில் மூர்த்தாபிஷிக்தராய், ஸ்ரீமத் வேதமார்க ப்ரதிஷ்டாபநாசார்ய பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ர உபய வேதாந்தாசார்யராய் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருமேனியில் சிறிது நாள் நோவு சாத்திக்கொண்டிருந்த காரணத்தினால் சக்திக் குறைவுண்டானதைக் கண்டருளி, ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய திருவாராதந நித்ய ததீயாராதந க்ரந்த காலக்ஷேபாதி கைங்கர்யங்களைத் தம் இது வரையில் ஸர்வோத்க்ருஷ்டமாக நடத்தி வந்ததுபோல் தமக்குப் பிற்காலத்திலும் அவை கைங்கர்யங்கள் குறைவற நடக்கவேணுமென்கிற ஆஸ்தாதிசயத்தினால் தமது ஆஸ்தான வித்வானாக எழுந்தருளியிருந்த ஸ்ரீ. உ. வே. வித்வான். இஞ்சிமேடு ரங்கநாதாசார்ய ஸ்வாமியைத் தமது காலத்திற்குப் பிறகு 42-வது அவை ஆஸ்தானத்திலிருந்து ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய ஸர்வ கைங்கர்யங்களையும் நிர்வஹிக்கும்படி நாளது [illegible] சித்திரைமீ

184796

23-டயில் நியமித்தருளி, அந்த ஸ்வாமிக்கு யதாசாஸ்த்ரமாக ஸந்யாஸாச்ரம ஸ்வீகாரத்தையும் செய்வித்து, ஸ்ரீ ஹம்ஸ முத்ரையையும் ப்ரஸாதித்தருளி, ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய திருவாராதநம் முதலான ஸர்வ கைங்கர்யங்களையும் அந்த ஸ்வாமி செய்யும்படித் தாம்கூட எழுந்தருளியிருந்து நடத்தி வைத்திருப்பதை உத்தேசித்து ஸர்வ ஜநங்களும் ஸந்தோஷிக்கிறார்கள். ஷை. ஸ்ரீ உ. வே. இஞ்சிமேடு ரங்கநாதாசார்ய ஸ்வாமியும் தத்காலம் 41-வது ஆஸ்தாநத்தில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ[illegible]-ரான ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகனைப்போலவே ஷை. ஆஸ்தாந நிர்வஹணத்துக்கு அவச்யாபேக்ஷிதங்களான ஜ்ஞாநாநுஷ்டாந வைராக்யாதி கல்யாண குண கணங்களினால் ஸம்பலித்த வைபவராக எழுந்தருளி இருப்பது யாவருமறிந்த விஷயம்.

ஸ்ரீ அழகிய சிங்கர் திருமேனியில் கொஞ்சம் நோவு சாத்திக்கொண்டிருப்பதைக் கண்ட ஸ்ரீ ஸந்நிதியின் சிஷ்ய வர்க்கங்கள் ஸ்ரீ அழகிய சிங்கருக்குப் பிற்காலத்திலும் ஸ்ரீ அழகிய சிங்கரைப்போன்ற ஜ்ஞாநாதி கல்யாண குணங்கள் குடிகொண்ட மற்றொரு ஸ்வாமி இந்த ஆஸ்தாநத்தை அலங்கரிக்க வேணுமேயென்று விசாரப்படாதபடி தமது திருமேனி விசேஷ ஸ்வாஸ்த்யத்துடனிருக்கும்பொழுதே ஷை. ஆஸ்தாந நிர்வஹணத்துக்கு அநுரூபமான ஜ்ஞாநாநுஷ்டாந வைராக்யாதி குணங்களையுடைய ஓர் வ்யக்தியைத் தமது திருவுள்ளத்தில் ஆலோசித்துத் தேர்ந்தெடுத்து ஷை. ஆஸ்தாநத்தை நிர்வஹிக்கும்படி நியமித்தருளினதினால் ஸ்ரீ அழகிய சிங்கருக்கு ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய ஸர்வ கைங்கர்யங்களும் தமக்குப் பிற்காலத்திலும் குறைவற நடக்கவேணுமென்கிற விஷயத்தில் இருக்கும் ச்ரத்தையின் அதிசயமும் அஸாதாரணமான ஔதார்யத்தின் அதிசயமும் ஸ்வதேச ஸ்வஜந பக்ஷபாதாதி மயாஹாவமும் ஸ்ரீசடகோபனுடைய கருணா ப்ரவாஹ ரூபமான ஹம்ஸ முத்ரா பர்யந்தமான விபூதி ப்ரதாநத்தினால் தமது ஆத்மாநு குணமான வைராக்ய விசேஷமும் அந்த ஸ்வாமியைக் கொண்டு ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ[illegible] ஸர்வ கைங்கர்யங்களையும் செய்வித்துத் தாமதைக்கண்டருளி [illegible] இருப்பதால் பரஸம்ருத்தியேக ஸந்தோஷ ஸ்வபாவம்

முதலான சாஸ்த்ரைக ஸமதிகம்யங்களான புருஷோத்தம குணங்கள் ப்ரத்யக்ஷமாக ப்ரகாசிக்கின்றன வன்றோ? இம்மாதிரியான உத்தம குணங்களை ஸர்வேச்வரன் இவ்வுலகத்தில் முன்பு சில காலத்தில் ப்ரகாசப் படுத்தாததினாலன்றோ ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்மனுடைய கைங்கர்யங்கள் சில காலங்களில் குறைந்து போய் அதன் மூலமாய் விபூதியும் குறைந்துபோய் விட்டது. விபரீதாநுஷ்டாநத்திற்கு விளை நிலமான இக்கலிகாலத்திலும் ஸ்ரீ அழகிய சிங்கர் போன்ற ஜகதுஜ்ஜீவநத்தையே ப்ரதாந ப்ரயோஜநமாகத் திருவுள்ளம் பற்றுகிற சில ஆசார்யர்கள் அவதரித்திருப்பதினாலன்றோ 'கலியும் கெடும் கண்டு கொள்மின்' என்கிற பராங்குசனுடைய பாசுரம் பிழையாகாது பிழைத்திருக்கிறது.

இப்படி ஸர்வஸம்ப்ரதாயாபி வ்ருத்திக்கு ஹேதுக்களான ப்ரதாந கார்யங்களைப் பலபடியாகச் செய்தருளி வருகிற ஸ்ரீ அழகிய சிங்கர் திருமேனியும் அநுதிநமும் அநுகூலமாய் வருவதைக் கண்டு நாம் ஆநந்தாம்ருத ஸமுத்ர மத்யத்தில் நீந்த பெற்ற நெஞ்சுடையவராய் ஸந்தோஷிக்கிறோம். இந்த ஸம்ஸார ஸமுத்ர மத்தியில் மூழ்கி தாபத்ரய படபாக்நியினால் தபிக்கப்பட்டு 'ஆவாரார் துணை' யென்று அலமாந்து நிற்கும் சேதநர்களைத் தமது கருணாம்ருத வர்ஷத்தினால் கரையேற்றி உஜ்ஜீவிப்பிக்கும் ஆசார்யர்கள் ஒருவருக்கிருவராய் எழுந்தருளி இருந்து, தங்களுடைய ஜ்ஞாநக் கைகளைக் கொடுத்து, அவ்வாறு அழுந்துமவர்களைக் கரை ஏற்றினால் அநந்தங்களான சேதந வர்க்கங்கள் அக்கரையேறி வீடு பெற்று வாழ்ந்திருக்க மிகவும் அநுகூலமாக விருக்குமன்றோ? முன்பொருகாலத்தில் பதரிகாச்ரமத்தில் ஆசிரியனாகவும் சிஷ்யனாகவும் அவதரித்து ஜகதுஜ்ஜீவநம் செய்தருளின நாராயணன் இக்கலியுகத்திற் கநுகூலமான த்ராமிட தேசத்தில் மீண்டுமவ்வழியே அவதரித்தருளினானென்று அக்குண பூர்த்தியைக் கண்டு அனைவராலும் கொண்டாடும்படி ஆசார்ய சிஷ்யர்களாக இங்கவதரித்திருக்கிற இவ்வழகிய சிங்கர்களுக்கும் இவ்விருவராலும் அநுதிநமும் ஆராதிக்கப்பெற்று பரிபூர்ண மநோரதனாய் எழுந்தருளி இருக்கிற அர்ச்சா ரூபியான அழகிய சிங்கருக்கும் இச்சேர்த்தியின் அழகைக் கண்ணாரக் கண்டுகக்கும் பாகவதர்களுக்கும் 'அடியோமோடும் நின்னோடு' மென்கிறபடியே நாமும் பல்லாண்டு பாடி வாழ்வோமாக.

ஸ்ரீ:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்.

[ஸ்ரீ. உப. வித்வாந். ஏ. வி. கோபாலாசார்யர், திருச்சி.]

(ஸஞ்சிகை 7, பக்கம் 191 தொடர்ச்சி.)

'த்விஷ்டதாமுணாவஶோஷ: ஸ்த்ரீணாமாலோகநாதிஸஹாயஸோ |
தோஷாநுஸந்தாநாயாஸ: ஸ்ம்ருதிரபி ஊரீகரோதி வைராக்யம் ||'

வஸந்தனால் சொல்லப்படுகிற இந்த ச்லோகம், கீழ் வரையப்படும் ப்ரபோத சந்த்ரோதய ச்லோகத்தைத் திருவுள்ளத்தில் வைத்துக் கொண்டு உரைக்கப் பட்டதென்பது நிச்சயம். "ஸங்க விலோகநஹாஷணவிலாஸவரி ஹாஸகேலிபரிரம்பா: | ஸ்மரணமபி காமிநீநா மலமிஹ மநஸோ விகாராய ||" ப்ரபோத சந்த்ரோதய ச்லோகத்தில் 'விலோகநம்' என்னும் பதத்திற்கு ஸமாஸத்தில் அடுத்தாப்போல் இருக்கும் 'பாஷணம்', 'விலாஸம்' 'பரிஹாஸம்', 'கேளி', 'பரிரம்பம்' என்கிற பதங்கள் ஸங்கல்ப ஸூர்யோதய ச்லோகத்தில் 'ஆலோகநாதி' என்பதில் 'ஆதி' பதத்தால் க்ரஹிக்கவேணுமென்பது ஸ்பஷ்டம். 'ஸ்மரணமபி' என்பதினால் 'ஸ்மரணம் கீர்த்தநம் கேளி:' என்கிற ப்ரஸித்த ச்லோகத்தில் முதற்படியான ஸ்மரணத்தை வாங்குவதில் நோக்கு. இந்த ச்லோகத்தில் 'ஸ்ம்ருதி' என்று ஸ்மரணத்தைச் சொன்னாலும் அந்த ஸ்மரணத்தை வாங்கவில்லை. அந்த ஸ்மரணம் ராகத்தையுடைய காமியின் அநுராக ஸ்மரணம். இங்கே ஸ்ம்ருதியானது வைராக்யத்தை அப்யாஸம் செய்பவனால் ஸ்த்ரீயைத் தள்ளுவதற்காகச் செய்யப்படும் ஸ்மரணம். 'ஸ்மரணமபி' என்று அங்கே சொன்னதைப் போல் இங்கே 'ஸ்ம்ருதிரபி' என்று கூறப்பட்டது. அங்கே போகத்தை நினைத்து ஸ்ம்ருதி; இங்கே தள்ளுவதற்காக ஸ்ம்ருதி. அந்த ச்லோகத்தில் சொல்லப்பட்ட ஸ்ம்ருதி, ஸ்த்ரீகளின் குணத்தின் பராமர்சம்; இங்கே சொல்லப்படும் ஸ்ம்ருதி, அவர்கள் தோஷத்தின் பராமர்சம். அங்கே 'ஸங்க' என்று சொல்லியதற்குப் பதிலாக இங்கே 'த்விஷ்ட' என்று சொல்லப்பட்டது. குணத்தை நினைத்த மாத்ரத்தால் காமம் வ்ருத்தியடையும். அந்த ப்ரீதி நினைப்பும் வேண்டாமென்று அதைத் தள்ளுவதற்காக நினைப்பதுகூட புத்திக்குக் கலக்கத்தையே உண்டுபண்ணி வைராக்யத்தை வெகு தூரம் அகலச் செய்யும். பாதக ஜ்ஞாநமானது ப்ராந்தியைப் போக்கும் என்பதை ப்ரஸித்தமாய்க் கண்டோம். இங்கே ஸ்த்ரீ பாதக ஸ்ம்ருதியானது ஸ்த்ரீ ப்ரமத்தையே அதிகப்படுத்துகிறது என்று ஆச்சர்யம் காட்டப்படுகின்றது. 'அப்யாஸத்தாலும் வைராக்யத்தாலும் மநஸ்ஸைப் பிடித்து நிறுத்தலாம்' என்று கீதையில் சொன்ன விஷயம் இங்கே பரிஹாஸம் செய்யப்படுகிறது. அப்யாஸமென்றுமென்ன? 'தத்ர ஸ்திதௌ யத்நோऽப்யாஸ:' என்றல்லவா யோகஸூத்ரம்? த்யாநம் பண்ண வேண்டிய வஸ்துவில் நிறுத்தும்படி யத்நம் செய்வது அப்யாஸமாகும். விஷயங்களில் த்ருஷ்ணையில்லாமை வைராக்யம். விஷய தோஷ தர்சநத்தால் அது ஸாதிக்கப்படும். விஷய தோஷம் ப்ரத்யக்ஷம்போல் அநுபவாரூடமாவதற்கு விஷய தோஷங்களை மறுபடியும் மறுபடியும் அநுஸ்யூதமாய்ச் சிந்தநம் செய்யவேணும். ஸ்த்ரீ தோஷத்தை நினைப்பது ஸ்த்ரீயை நினையாமல் எப்படிக் கூடும்? ஸ்த்ரீயை நினைக்கையிலேயே மநஸ் த்ரவிக்க ஆரம்பிக்குமே. ஆகையால் ஸ்த்ரீயை விடவேணுமென்று யத்நம் செய்யச் செய்ய, ஸ்த்ரீ விஷயமான ப்ரீதியே உறுதிப்படும்; விரோதியே உறுதியாய் நிற்கும் என்பதும், நிற்கட்டும் என்பதைச் சொல்லும் 'த்விஷ்டதா' என்கிற வார்த்தையினாலும் த்வநிக்கிறது. அப்யாஸத்தால் த்யாநம் செய்யவேண்டிய வஸ்துவில் ஸ்திதி கூடிவராது. விடயத்நப்படும் விரோதியான விஷயத்தில்தான் நிலை ஏற்படும்.

சஞ்சலமும் அஸ்திரமுமான மநஸ்ஸானது எந்தெந்த விஷயத்தில் ஓடுமோ அந்தந்த விஷயத்திலிருந்து அதை இழுத்து ஆத்மாவில் நிறுத்தி வசப்படுத்த வேண்டுமென்பது கீதாசார்யனுடைய உபதேசம். விஷயத்தின் நினைவு ஆரம்பிக்கும்பொழுதே மநஸ் அங்கே ஒட்டிக்கொள்ளும். விஷயம் பிரிந்து தூரம் போனால் மநஸ்ஸும் அதன் பின் ஓடும். அதை எப்படி நிறுத்துவது? மநஸ்ஸும் இந்த்ரியங்களும் வசப்படாதிருந்தால் அவைகள் அடங்காத துஷ்டக் குதிரைகளுக்கு ஒப்பாகுமென்றும், இவனுக்கு ஹிதமும் ப்ராப்யமுமான விஷ்ணு பதத்திற்குக் கொண்டு போகாமல் கெட்ட இடங்களுக்கு இவனைக் கொண்டு போகுமென்றும் கடவல்லியில் சொல்லப்பட்டது. ச்ருதி கீதையிலும் மநஸ்ஸை அடங்காத குதிரையென்றும், அதை ஆசார்யன் திருவடிகளின் பலத்தால் மட்டும் அடக்கலாமென்றும் சொல்லப்பட்டது. இங்கே அடுத்த ச்லோகத்தில் மநஸ் அதிகமான மதம் பிடித்த யானைக்கு ஒப்பிடப்படுகிறது. விஷயங்களென்கிற அடவிகளில் மதம் பிடித்த யானையான மநஸ்ஸானது தோன்றியபடி ஓடும்.

உபநிஷத்தென்னும் அடவியில் மநஸ் ஸஞ்சரிக்க வேணுமென்று விவேக னுடைய ஆசை. விஷயக் காட்டில்தான் மநஸ் மதங்த கஜம்போல் ஓடும் என்று பரிஹஸிக்கிறான் வஸந்தன். மநஸ்ஸை அந்தந்த விஷயத்திலிருந்து நிவர்த் திக்க வேண்டும் (அதாவது திருப்பவேண்டும்) என்று கீதையில் சொன்ன படி, இவன் தன் பலத்தினால் அதை எப்படித் திருப்பக்கூடும்? ஈச்வரனுடைய பலத்தினாலும் ஆசார்ய கடாக்ஷ பலத்தினாலும் மநோஜயத்தை ஸாதிக்கலாம் என்று சருதிகீதையிலும், பின்னால் இதே அங்கத்தில் விவேக மஹாராஜாவின் வாக்யங்களிலும் சொல்லுவதற்கு விரோதம் வராமல் 'தன்பலத்தினால் எப்படி த்திருப்பக்கூடும்?' என்று இங்கே சொல்லப்படுகிறது. இப்படி ஆசைப்படுவது, தாமரை நூலினால் ஐராவதத்தைக் கட்ட முயல்வது போலாகும். 'ஸுரதந்தி' என்கிற பதத்தினால், அதைக் கட்டப்போனால் அதன் தந்தங்களால் கொல்லப் படும் அபாயம் தவிர வேறு பயனில்லை யென்று த்வநிக்கிறது. 'மதயானையின் காலுக்கு சிலந்திப் பூச்சியின் கூட்டிலுள்ள நூல் விலங்காகுமா?' என்று பின் னால் சொல்லப் போகிறது. இதைக் கேட்ட ரதி மோஹம் எவ்வளவு த்ருடமாகப் பிச்சேறியிருந்தாலும் அதை அடியோடு வேரறுக்கச் சக்தியு டைய யோகீச்வரர்கள் கண்ணில் படாமல் அதைப் பரிஹரித்துத்தான் தன் பதியான மந்மதன் மற்ற இடங்களில் தன் பராக்ரமத்தைச் செலுத்த வேணு மென்கிறாள். மோஹம் த்ருட பூமியை அடைந்திருப்பதாகச் சொல்லுவது யோக ஸூத்ரத்தில் அப்யாஸ விஷயத்தில் த்ருடபூமி அடைந்திருப்ப தாகச் சொல்லியிருப்பதை நினைவுக்குக் கொண்டுவருகிறது. யோகீச்வரர்க ளுடைய ப்ரஸ்தாவமானதால் யோக ஸூத்ரங்களையும் கீதையில் யோகத் தைப் பற்றிச் சொல்லியிருப்பதையும் மநஸ்ஸில் வைத்துக்கொண்டு இங்கே சப்தங்கள் ப்ரயோகிக்கப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஸ்த்ரீகளைப்பற்றிச் சொல்லிய இரண்டு ச்லோகங்களும் சுக்ராசார்யருடைய ஒரு ச்லோகத்தை மநஸ்ஸில் வைத்துக்கொண்டு செய்யப்பட்டதாகச் சொல்லலாம். அந்த ச்லோகமாவது:—

"ஸ்த்ரீணாம் நாமாபி ஸம்ஹரதி விகரோத்யேவ மாநஸம் |
கிம் புநர்தர்சநம் தாஸாம் விலாஸோல்லாஸிதப்ருவாம் ||"

நாமங்கூட மநஸ்ஸை விகரிக்கும். விலாஸத்தால் உல்லாஸமுள்ள புருவத்தை யுடைய ஸ்த்ரீகளின் தர்சநம் எதைச் செய்யமாட்டாது? சுக்ராசார்யருக் குக் காவ்யரென்று பெயர். கவிகளுக்குள் அவரே உயர்ந்தவர்; அவரேதான் உயர்ந்தவர் என்றார் கீதாசார்யரும். சுக்ரர் அஸுரர்களுக்குக் குரு. காம னும் வஸந்தனும் அஸுரத்தன்மையை உடையவர்கள். அவர்கள் அஸுர

14 JUL 1929

குருவான சுக்ராசார்யரென்னும் கவியினுடைய சொல்லை அநுஸரித்துப் பேசுவது ந்யாய்யமென்று ஸ்வாமியினுடைய பாவம் போலும்!

காமன் ரதியைப் பரிஹஸித்துப் பேசுகிறான். 'கண்ணில் உனக்குப் பயம் இருப்பது ஸ்த்ரீ ஸ்வபாவத்துக்கு அழகு. ஆனால் மனத்தில் பயம் இருக்கக் கூடாது. யோகீச்வரரென்று எனக்கு அடிமைப்பட்ட பரம காமிகளுக்குத் தான் சாஸ்த்ரங்களில் பெயரிடுகிறார்கள். 'யத்ர யோகீச்வர: க்ருஷ்ண:' என்று யோக சாஸ்த்ரமான கீதையின் முடிவு. ஆய்ச் சியருக்கு வசப்பட்ட பரம காமுகர் அந்த யோகீச்வரர் என் பது ப்ரஸித்தமல்லவா? யோகீச்வரரென்று அர்த்த நாரீச்வரரையும் சொல்லுவார்கள். யோகீச்வரர்களையும், நான் ஸ்த்ரீயை விட்டு அகலாத அவருடைய சரீரத்தில் சேர்த்து வைப்பேன். யோகிகளை யோஜநம் செய்வது ந்யாயந்தானே. யோகமென்பதற்குச் 'சேர்தல் அல்லது ஒன்று தல்' என்பது அர்த்தம். யோகிகள் தாங்கள் த்யாநம் செய்யும் வஸ்துவுடன் பிரியாத சேர்க்கையை விரும்புவார்கள். ஸ்த்ரீகளையே அவர்களுக்கு ப்ரிய மான த்யாந வஸ்துவாக மாற்றி நான் அந்த த்யாந வஸ்துக்களோடு யோகிகளை யோஜநம் செய்துவிடுகிறேன். தபஸ்ஸில் கல்தூணைப்போலச் சலிக்காத உறுதியையுடைய ஈச்வரனென்கிற யோகீச்வரனையும் நான் இப்படிச் சேர்த்து வைக்கவில்லையா? மற்ற யோகிகளுக்கும் அந்த ஈச்வர பதவியை நான் கொடுக்கிறேன். என்னுடைய அஸ்த்ரங்கள் ம்ருதுவாயும் தீக்ஷ்ணமாயும் இருக்கும். என்னுடைய அஸ்த்ரங்களால் வரும் நோய் அழகைக் குறைக் காது. இங்கே 'ஸம்ஹதம்' என்கிற சப்தம் 'ததஸ்ஸ்த்ரீஷ்வேவம் ஸம்ஹதம் வரார்ஹம் ப்ரவதிஷ்ட' என்கிற சாகுந்தல ச்லோகத்தை அநுஸரித்தது. என் னுடைய அஸ்த்ரங்களாகிற ஆணிகளால் ஒன்றுக்கொன்று சேர்த்துப் பிணைக் கப்பட்டிருக்கிறது அந்த ஜோடி. என்னுடைய அஸ்த்ரங்கள் கிரம்பவும் கூர்மையும் உறுதியுள்ளவுமான ஆணிகளாயிருந்தாலும் அவைகளால் ஹிம்ஸையிராது. அழகு முன்னிருந்ததற்கு அதிகமாகும். ஸுகமுமப்படியே. ஆணழகு பெண்ணுடம்பில் பரவியிருக்கும். பெண்ணழகு ஆணுடம்பில் பரவியிருக்கும். இதனால் ஆண்பாதியில் பெண் கவசம் போர்த்தினது போல வும் பெண் பாதியில் ஆண் கவசம் போர்த்தினது போலவும் சோபிக்கும். என் னுடைய பாணங்களால் இப்படிப் பிரியாத ப்ரியச் சேர்க்கை ஏற்பட்டது. ஒன்றுக்கொன்று ஆணிபடித்துச் சேர்க்கப்பட்டது என்று சொல்லுவதில் உடம்பைப்பற்றிச் சொல்லிற்று. உயிரோவென்றால் இரண்டும் ஒன்றாக இரண்டென்றே தெரியாமல் . என்னால் தைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஜோடியை நீ அறியமாட்டாயா? கோரமான தபஸ்ஸில் இருந்த யோகியான

ஈச்வரனைத் தானே நானிப்படிச் செய்வித்தேன். இதை யறிந்தும் உனக்கு யோகீச்வரரிடமிருந்து என்ன பயம்?'

இதைக் கேட்டும் ரதிக்குப் பயம் தெளியவில்லை. 'உம்முடைய மாஹாத்ம்யம் எனக்குத் தெரியாததல்ல. புத்தி பலம் எதையும் ஸாதிக்கும் என்று சொல்லுவார்கள். மதியால் விதியை வெல்லலாம். தெய்வமும் எதிரிகளுக்குக் கை கொடுக்க ஆரம்பித்துவிட்டது. அவர்களுக்கு உத்ஸாஹ சக்தியும் மந்த்ர சக்தியும் பலம். உயர்ந்த மந்த்ரங்கள் அவர்களிடமிருக்கிறது. இதையெல்லாம் நினைக்க, நான் பெருங்காற்றில் வாழையைப்போல் நடுங்குகிறேன்' 'ப்ரவாதே கதலீயது' என்று இராவணனைக் கண்டு பயத்தினால் ஸீதை நடுங்கினதாகச் சொல்லப்பட்டது. இங்கே விவேக மஹாராஜனை நினைத்து அஸுர குலத்தைச் சேர்ந்த ரதி நடுங்குவதாக வேடிக்கையாக விபரீதம் காட்டப்படுகின்றது. இதற்கு மன்மதன் சொல்லுகிறான். 'நானிருக்குமிடத்தில் புத்தி எங்கே நிற்கும்? உனக்கு இடுப்பு ஸூக்ஷ்மமாயிருப்பது போல் ஏன் மநஸ்ஸும் ஸூக்ஷ்மமாயிருக்கக்கூடாது? அதன் காரணத்தை நான் ஆலோசனை செய்து இப்பொழுது தெரிந்து கொண்டேன். உன்னுடைய ஸ்தநங்களிலுள்ள ஸ்தூலத்தன்மை அதன் மத்தியிலுள்ள ஹ்ருதயத்திலும் பரவிவிட்டது போலும். என் மஹிமையைப் பார். என்னால் ஆஜ்ஞாபிக்கப்பட்ட கோபம் கண்ணும் புத்தியும் தெரியாமல் ஒரு மோஹ இருட்டை உண்டாக்கும். அந்த மோஹத்தால் ஜ்ஞாபகம் தவறும். அதனால் புத்தி நழுவும். புத்தி நழுவவே அவன் அஜ்ஞாந தமஸ்ஸில் முழுகுவான். இந்த அவஸ்தையில் மூடமான புத்தியையுடைய விவேகன் என்ன செய்யக்கூடும்? நம்முடைய கோபம் முதலிய வீரர்களுக்கு முன் எதிரிகளுடைய ஸைந்யம் எப்படி நிற்கும்? பரமபுருஷனுக்கு எப்படி ஐந்து ஆயுதங்களோ அப்படியே எனக்கும் ஐந்து ஆயுதங்கள். மிகவும் தைர்யமும் உறுதியுமுடைய எதிரிகளையும் அவர்கள் மநஸ்ஸைக் கடைந்து எனக்கு ஆளாக்குவேன். [இங்கே எதிரிகளை விமதநம் (அதாவது கடைதலைச்) செய்வதாக அழகாய்ச் சொல்லப்பட்டது. இங்கே மன்மதன் விஷயத்தில் சத்ருக்களைக் கொல்லுவதில் அபிப்ராயமில்லை. கடைவது என்பது கட்டையைக் கடைந்து அக்நியைக் கிளப்புவதைக் காட்டுகிறது. காஷ்டத்தைப் போலும் கல்லைப்போலும் காமத்திற்கு இடம் கொடாமலே இருக்கவேண்டுமென்கிற நிச்சயத்தோடு தன் நிலையையே மறந்து ப்ரஜ்ஞையில்லாமலே இருக்கட்டும். நான் அவர்களைக் கடைந்து காமாக்நியைக் கிளப்பி விடுவேன் என்று பாவம்.] எனக்கு மன்மதனென்று பெயரல்லவா? மனஸ்ஸை மதநம் செய்கிறவன் மன்மதன்.

அடுத்த ச்லோகத்தில் நாராயணமுநி ஊர்வசியை ஸ்ருஷ்டித்ததைப்பற்றி மன்மதன் பரிஹாஸம் செய்கிறான். 'உலகத்தில் ப்ரவ்ருத்தி மார்க்கமென்றும் நிவ்ருத்திமார்க்கமென்றும் இரண்டுண்டாம். அதில் ப்ரவ்ருத்தி மார்க்கத்தைக் கைப்பற்றினால் தான் ஸுகமுண்டு என்று நம்முடைய நிச்சயம். வைதிகர்களான மீமாம்ஸகர்களும் ப்ரவ்ருத்தி மார்க்கத்தாலடையக்கூடிய ஸ்வர்க்காதி விஷய ஸுகங்களை புருஷார்த்தமென்று ஒப்புக்கொள்கிறார்கள். அவர்களுக்கும் நமக்கும் விரோதமில்லை. நிவ்ருத்தி மார்க்கம் என்றால் ஸகல ஸுகங்களையும் ஸகல ஆசைகளையும் துறக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஸுகத்தை விட்டால்தான் அம்ருதத்வம் வருமென்கிறார்கள். ஸுகத்தை அடியோடு விட்டு விடுவதால் எல்லாவற்றிற்கும் உயர்ந்த ஸுகம் வருமென்று யார் நம்பக் கூடும்? இந்த ஸர்வ அநுபவ விருத்தமான நிவ்ருத்தி மார்க்கத்தை நாராயண முநி ஸநக ஸநந்தநாதி முநிகளுக்கு உபதேசித்தாராம். அந்த உபதேசத்தைக் கேட்டு ஒருவரும் ஏமாறக் கூடாது. இப்படி உபதேசித்தவருக்கு அதில் உண்மையான தாத்பர்யமிருந்தால் அவர் லோகோத்தர லாவண்யமுடைய ஸ்த்ரீ ரத்நமாகிய ஊர்வசியைத் தன் துடையிலிருந்து ஸ்ருஷ்டித்து எனக்குப் பலத்தைக் கொடுத்து உலகத்தை மயக்கி ப்ரவ்ருத்தி மார்க்கத்தில் அழுத்துவாரா? அவருடைய இந்த அநுஷ்டாநத்தால் அவரும் நமக்கு வேண்டிய ஸைந்ய பலத்தை ஸ்ருஷ்டித்து நமக்கே அநுகூலம் செய்கிறாரென்று சொல்லவேண்டும். ஊர்வசி போன்ற ஸ்த்ரீ ரத்நத்தை நானல்லவா என் கார்ய ஸித்திக்காக ஸ்ருஷ்டிக்கவேண்டும். நானே தான் அவளை ஸ்ருஷ்டித்தேனோ அல்லது என் தோழன் வஸந்தன் தான் ஸ்ருஷ்டித்தானோ என்று சொன்னார் மஹாகவி விக்ரமோர்வசீய நாடகத்தில். நிவ்ருத்தி மார்க்க ஸம்ப்ரதாயத்திற்கு ஆதிப்ரவர்த்தகரான நாராயணமுநியே இப்படி நமக்குப் பரம அநுகூலமான பலத்தை ஏற்படுத்தும் பொழுது, அந்த ஸம்ப்ரதாயம் எப்படி ஜீவிக்கும்?' இவற்றைக்கேட்டு ரதி, ப்ரஹ்மதேவன் முதற் கொண்டு புழுவரைக்குமுள்ள ப்ராணி ராசிகள் முழுவதும் தன் நாயகனுடைய வீர்யத்தைத் தடுக்கக் கூடாதவர்களாய், காமத்திற்கு உட்பட்டு, காமத்திலேயே உழன்று வருகிறார்கள் என்று ஒப்புக்கொண்டு, மஹாமோஹன் முதலியவர்களுக்கும் விவேகன் முதலியவர்களுக்கும் ஏன் ஓயாத சச்சரவு இருக்க வேண்டும் என்று கேட்கிறாள். அதற்குக் காமன், 'இரண்டு கக்ஷிக்காரர்களும் ஒரே குலத்தில் பிறந்தவர்கள்; எல்லாரும் ஒரே கொத்து' என்று பதில் சொல்லுகிறான். ப்ரபோத சந்த்ரோதயத்திலும் இந்த விஷயம் உபபாதிக்கப்பட்டுளது. ஆனால் அங்கே மாயை ஈச்வரனுக்குப் பத்நியென்றும், அவளிடத்தில் மநஸ் என்கிற ஒரு பிள்ளை

பிறந்ததாயும், அந்தப் பிள்ளைக்கு ப்ரவ்ருத்தி யென்றும் நிவ்ருத்தி யென்றும் இரண்டு பத்நிகளென்றும், ப்ரவ்ருத்தி தேவிக்கு மஹா மோஹன் முதலியவர்கள் பிள்ளைகளென்றும், நிவ்ருத்தி தேவிக்கு விவேகன் முதலியவர்கள் பிள்ளைகளென்றும், ஆக இப்படிக்கு அந்தக் குலம் இரண்டாகப் பிரிந்ததென்றும் காமன் சொல்லுகிறான். இங்கே ஜீவனுடைய புத்தியைப் பத்நியாகவும் ஜீவனைத் தகப்பனாகவும் ஸத்வம் ரஜஸ் தமஸ் என்கிற குணங்களில் ஒவ்வொன்று தலை யெடுக்கும்பொழுது ஒவ்வொரு குணங்கள் பிறப்பதாயும், அதாவது ஸத்வம் தலை யெடுக்கும்பொழுது விவேகன் முதலியவர்களும், ரஜோகுணம் தலை யெடுக்கும்பொழுது ராகம் த்வேஷம் முதலியவர்களும், தமஸ் தலை யெடுக்கும் பொழுது மஹா மோஹன் முதலியவர்களும் பிறந்தார்கள். இப்படி ரஜஸ் தமஸ்ஸுக்களுடைய காலங்களில் ப்ரவ்ருத்தி தேவியிடம் பிறந்த மஹாமோஹன் ராகன் முதலியவர்களும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளானதால் ஒன்று சேர்ந்துகொண்டு ஒரே வகுப்பானார்கள். புத்தி யென்பது புருஷனுக்குத் தர்மமான ஜ்ஞானம். அந்தப் புத்திதான் குணபேதத்தால் விவேகமென்றும் காமமென்றும் மோஹமென்றும் பற்பல அவஸ்தைகளை அடைகிறது. இந்த அவஸ்தைகளெல்லாம் புத்தியில் பிறப்பதால் அவை புத்தியின் ப்ரஜைகளென்று சொல்லப்படுகின்றன. ஆத்மாவுக்கு மாயாதேவி ஸம்பந்தத்தால் மநஸ்ஸென்கிற பிள்ளையும் அந்தப் பிள்ளையினுடைய வயிற்றில் மஹா மோஹன் விவேகன் முதலியவர்களும் பிறந்தார்கள் என்று சொல்லப்பட்டதை மாற்றி, இங்கே ஆத்மாவுக்குப் புத்தியென்னும் மனைவியிடத்தில் அவர்களெல்லாரும் பிறந்ததாகக் கூறப்படுகிறது. அத்வைதத்தில் ஆத்மாவுக்குப் புத்தி யென்கிற தர்மம் நித்யமாக ஒப்புக்கொள்ளப் படுகிறதில்லை. மநஸ்ஸினுடைய வ்ருத்திகள்தான் அவர்களுக்கு ஜ்ஞானம் என்பது. மநஸ்ஸும் ஆத்மாவுக்கு ஸ்வபாவமாய் உள்ளதல்ல. அது மாயா ஸம்பந்தத்தால் ஏற்படுவது. அத்வைதத்தில் மநஸ்ஸு இந்த்ரியமல்ல. இரண்டு மதத்திலும் மநஸ் என்பது கர்மம் தொலைந்து மோக்ஷம் ஸித்திக்கையில் விட்டுப்போவது தான். ஆனால் புத்தி யென்கிற தர்மபூத ஜ்ஞானம் ஒருக்காலும் அழிகிறதில்லை என்னும் ச்ருதியை அநுஸரித்து அது நித்யமாக ஸித்தாந்தத்தில் ஒப்புக் கொள்ளப்படுகிறது. மாயையென்பது ப்ரக்ருதிக்குப் பெயர். மாயா ஸம்பந்தத்திற்குப் பதிலாக இங்கே முக்குணத்தின் ஸம்பந்தம் சொல்லப்படுகிறது. ஆத்மா முக்குண ஸம்பந்தத்தால் போகங்களை அநுபவிப்பதால் அவன் போக்தாவென்று இங்கே சொல்லப்படுகிறான். நன்றாய் ப்ரக்ருதி போகங்களைப் புஜித்து ஸுகரஸத்தை அநுபவிக்கப் பாக்யம் பெற்றவனை விவேகன் முதலிய பிள்ளைகள் அநுபவிக்க வொட்டாமல் செய்கிறார்களே என்று அவர்கள் பேரில் பழி சுமத்த மந்மதன் யத்நப்படுகிறான். சரீரமல்லவா போகா

யதநம். சரீரம் தொலைந்தால் போக ப்ரஸக்தியேது? சரீரத்தைத் தொலைத்துக் கொலை செய்கிறார்கள் தகப்பனை. விவேகன் முதலியவர்கள் தகப்பனான ஆத்மாவினுடைய போக ஸுகத்திற்கு த்வேஷியான பழிகாரர்கள் என்று நிந்திக்கப்படுகிறார்கள். முக்குணங்களால் மூன்று வகுப்பு ஏற்பட்டாலும் கெடுதலான வகுப்பு இரண்டும் சேர்ந்து ஒன்றாய்விட்டது. அவர்களெல்லாரும் சேர்ந்து மஹா மோஹனுக்குப் பட்டம் கட்டிவிட்டார்கள். விவேகன் கக்ஷியில் விவேகன் ராஜாவானான். மோஹத்திற்குத் துர்மதியும், விவேகனுக்கு ஸுமதியும் பத்நிகளானார்கள். இரண்டு பத்நிகளும் தோஷத்ருஷ்டி மயமானவர்கள் தான். இருவரும் ஜ்ஞாந ஸ்வரூபமுடையவராதலால் இருவரும் 'த்ருஷ்டிமயீ' என்று சொல்லப்படுகிறார்கள். இருவரும் தோஷத்தில் த்ருஷ்டியே உள்ளவர்கள் என்பதும் துல்யம். ஆனால் துர்மதி, ஸுகத்தைத் தடுக்கும் வழிகளில் குற்றம் பார்ப்பவள். ஸுமதியோ வென்றால் விஷய ரஸத்தில் தோஷம் பார்ப்பவள். அவள் ரஸ த்யாகத்தில் தோஷம் நினைப்பவள். இவள் ரஸத்தில் தோஷம் நினைப்பவள் என்று தாரதம்யம் காட்டுவதில் நோக்கு. 'ராகவனோடு நான் அநந்யை (அதாவது வேறல்லாதவள்), நான் அவருக்கு ப்ரபை' என்று ஸீதை சொல்லிக்கொண்டது போல், ஸுமதி விவேகனுக்கு அநந்யையானவள் என்று சொல்லுவதாகப் பரிஹஸிக்கப் படுகிறது.

தமஸ்ஸின் உதவியால் பிறந்த குலமும் அதைச் சார்ந்த ராகம் முதலிய குணங்களும் இருட்டுக் குலங்கள். அவர்கள் நிசாசரர்கள் [அதாவது இருட்டில் ஸஞ்சரிப்பவர்கள்.] அஸுரர்களும் ராக்ஷஸர்களும் தேவர்களுக்கு விரோதமாய்ச் சேர்ந்துகொள்வதுபோல் தேவ ப்ரக்ருதியான ஸத்வ குலத்திற்கு விரோதமாய் மற்ற இரண்டும் சேர்ந்துகொண்டன. தகப்பனாகிய ஆத்மாவும், தாயாராகிய புத்தியும், காமன் மோஹன் முதலிய பிள்ளைகளிடத்தில் ஸ்வபாவமாய் அதிக ப்ரியமாயிருக்கிறார்கள். இது விவேகன் முதலிய பிள்ளைகளுக்குப் பொறுக்கவில்லை. தகப்பனுக்கு அடியோடு போகத்தைத் தொலைக்கப் பார்க்கிறார்கள். மநஸ்ஸுக்கு நாசத்தை உண்டு பண்ணி அதனால் தங்களுக்கும் அழிவு வருவதாயிருந்தாலும் கூடப் பிறந்த மோஹ காமாதிகள் அழிந்தால் போதும் என்ற ரொம்பக் க்ரூர புத்தியுடையவர்கள். அநாதி காலமாய் அநுபவிக்கப்பட்டு எத்தனையோ ரஸங்களைக் கொடுத்துக் கொண்டு வந்த ப்ரக்ருதியினிடத்தில் அநேக தோஷங்கள் இருக்கின்றனவென்று தாங்களாகக் கிளப்பி அவளிடத்தில் வெறுப்பு உண்டாகும்படி செய்து விட்டுத் திரும்பி வராத ஒரு கடைசி ப்ரயாணமாகத் தகப்பனை அனுப்பிவிட முயலுகிறார்கள். இப்படி, தங்களுடைய ஸஹோதர குலத்தையே வேரோடு தொலைப்பதற்கு

குரங்கினத் தரசனாகிய ஸுக்ரீவனையும் அரக்க ராஜனாகிய விபீஷணனையும் ப்ரமாணமாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். இப்படித் தகப்பனாரைப் புராதன வழிகளிலிருந்து புது வழிகளில் இழுப்பதற்கு யத்னப் படும்பொழுது அவருடைய தூர்த்ததையை வர்ணிக்கமுடியாது. அவரைப் பிறவிக் குருடராயும் ஊமைகளில் முதல்வராயும் செவிடராயும் நபும்ஸகராயும் ஸ்த்ரீயாயும் பண்ணிவிடுகிறார்கள். தகப்பனாரை ஒரு பெருமாள் திருவடிகளில் சேர்க்கவேணுமென்றும், அந்தப் பெருமாள் பிறருடைய ரந்த்ரங்களில் பிறவிக் குருடராயும், பரதாரங்கள் விஷயத்தில் நபும்ஸகராயும், பிறரை நிந்திப்பதில் மூகர்களாயும் இருப்பவர்கள் தான் தனக்கு ப்ரியதமமானவர்கள் என்று சொல்லியிருப்பதால் தகப்பனாரை அப்படிக்கெல்லாம் நிரிந்த்ரியனாய்ச் செய்யவேண்டுமென்றும் சொல்லிக்கொண்டு, இப்படிக் கொடிய பாபங்கள் செய்கிறார்கள். இப்படித் தகப்பனை இவர்கள் படுத்தும் ஹிம்ஸையைப் பொறுக்காமல் உடன் பிறப்பையும் மறந்து, ஸோதர வாஞ்சையையும் விட்டு, நாம் அந்தத் துராத்மாக்களைக் கொல்ல முயலுகிறோம். ஆசையை வளரச் செய்து ஸுகத்தையும் ஸம்ஸாரத்தையும் பெருக்குவோம். அவர்கள் ஆசையை ஒழித்து ஸம்ஸாரத்தையும் போகத்தையும் அழிக்கப் பார்க்கிறார்கள். அவர்கள் தங்களுக்கும் அழிவு வருமே என்பதைக் கவனிக்கவில்லை. அவர்கள் ப்ரமாணமாகக் கொண்டாடும் ஸுக்ரீவனும் விபீஷணனும் கூடப் பிறந்த தமையன்களை அழிக்கத் தேடின போதிலும், தங்களையும் தங்கள் குலத்தையும் நிலைநிறுத்திக் கொண்டார்களே யொழிய, தங்களையும் சேர்த்துத் தொலைத்துக்கொள்ளவில்லையே என்று நாம் எதிர்த்துக் கக்ஷியாடினால் அப்படிச் செய்வதற்கு ஆதாரமாய் ந்யாயவாதத்தில் ஜாதியென்கிற வாதத்தைச் செய்கிறவர்கள் தாங்கள் செய்யும் ஜாதி வாதத்தால் தங்கள் கக்ஷிக்குப் பங்கம் வருவது திண்ணமாயிருந்தாலும், உபய கக்ஷிகளும் தொலைந்தாலும் ஸம்மதம் என்று ஒப்புக்கொள்ளவில்லையா என்று எடுத்துக் காட்டுகிறார்கள். எதிரியின் மதத்தின் பேரில் சொல்லும் தூஷணம் தன் மதத்தையும் அழிக்குமானால் அதை ஜாதி வாதமென்று சொல்லுகிறது. ஸ்வவ்யாகாதகமான பதிலை ஜாதி யென்பார்கள். இது ந்யாய பரிசுத்தியில் விஸ்தாரமாக விசாரிக்கப்பட்டிருக்கிறது. தன்னைத் தொலைத்துக் கொள்வதில் ஒரு புருஷார்த்தம் இருப்பதாயும், தான் நஷ்டமான பிறகு தன்னிலும் வேறான ஆத்மா என்பவன் ஸுகப்படட்டும் என்று நினைத்து புத்திமானொருவனும் முயலமாட்டான் என்றும், தான் தொலைந்து அயலானுக்கு மோக்ஷம் வருவதுதான் முக்தி யென்று கொண்டால் மோக்ஷ கதா ப்ரஸ்தாவ கந்தத்திலிருந்து வெகு தூரம் ஓடிப்போவான் என்றும் தெரிந்தவர்களின் வாக்யங்களைத் தள்ளி, இப்படிப் புத்திஹீநமாயும் க்ரூரமாயும் நடவடிக்கை நடத்துகிறார்கள். பிறவிக் குருடரும் ஊமைகளும் செவிடரும்

நபும்ஸகரும் ப்ரவ்ருத்தி கர்மங்களில் அதிகாரமில்லாமலும் ஒரு விதமான போகங்களும் இல்லாதவரல்லவா? தகப்பனாரை அப்படி ஆக்கலாமா என்றால் இந்த்ரியங்கள் தொலைவதும் ப்ரவ்ருத்தி கர்மங்கள் நீங்குவதும் சரீரந் தொலைவதும் தகப்பனுக்கு ஹிதந்தான் என்கிறார்கள். காகாஸுரனுக்கு ஒரு கண் போனதும் அவனுக்கு ஹிதந்தான் என்று அவர்கள் துர்க்கக்ஷி செய்கிறார்கள். வெகு காலமாகப் போகங்களைக் கொடுத்துவந்த ‘அஜா’ என்கிற ப்ரக்ருதியை இவன் ப்ரீதியுடன் அணைந்து ஸுகிக்கவேண்டும் என்று நமது யத்நம். அநுபவித்த அவளை ஹாநம் செய்யும்படி அவர்கள் யத்நம். இந்த அர்த்தத்தைச் சொல்லும் ச்ருதி இங்கே நினைக்கப்படுகிறது.

ஒரே தகப்பனுடைய பிள்ளைகள் எப்பொழுதாவது கலகப்பட்டாலும் ஆத்யந்திக சத்ருக்களாய் இருக்கமாட்டார்களே யென்றால், ஒரே காச்யப ப்ரஜாபதியினுடைய புத்ரர்களான ஸுரர்களும் அஸுரர்களும் ப்ராணாந்திகமான விரோதம் பாராட்டுவதுபோல் எங்களுக்குள்ளும் குணபேதத்தால் விரோதம் ஏற்பட்டது என்று மந்மதன் சொல்லக்கேட்டு ரதி, ‘எதற்கு அண்ணன் தம்பிகள் ஒருவரையொருவர் த்வம்ஸம் செய்ய ஆசைப்படவேணும்? அவர்கள் சண்டையில்லாமல் ராஜியாய்ப் போகக்கூடாதா?’ என்று ஆசையாய்க் கேட்கிறாள். அதற்கு மந்மதன் ‘ஸமாதாநம் என்பது ஒருக்காலும் நினைக்கவே முடியாது’ என்று சொல்லுகிறான். ‘இவர்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பராபாவங்களாயிற்று. விராகம் என்கிற வைராக்யம் ராகத்தின் அபாவமல்லவா? விவேகம் என்பது மோஹத்தின் அபாவமல்லவா? சாந்தி யென்பது காமக்ரோதங்களின் அபாவமல்லவா? ‘ஹாவாஹா° கஹாவ:’ என்று சொல்லிக்கொண்டு நம்முடைய அபாவத்தால் அவர்கள் வேறொரு பாவமாவார்கள் என்று அவர்கள் நினைவு. நம்முடைய அபாவம் அவர்களுடைய ஸ்வரூபம். அவர்களுடைய அபாவம் நம்முடைய ஸ்வரூபம். அவர்களிருந்தால் நாமில்லை. நாமிருந்தால் அவர்களில்லை. ஒரே புருஷனிடத்தில் அதாவது ஒரே அதிகரணத்தில் ஒன்றுக்கொன்று அத்யந்த விருத்தமான பாவாபாவங்கள் எப்படிச் சேர்ந்து ஸமாதாநமாயிருக்கும்? ஒன்றை ஒன்று அழிக்காமலிருப்பது அஸாத்யமே. நமக்கு வசப்பட்டவர்களிடத்தில் நாம் குடியிருக்கிறோம். அவர்களுக்கு வசப்பட்ட ஸ்வல்ப ஜநங்களிடத்தில் அவர்கள் குடியிருக்கிறார்கள். நம் குடிகள் கணக்கில்லை. அவர்கள் குடிகள் ம்ருக்யம். நாமிருக்குமிடத்தில் அவர்கள் சேர்ந்திருக்கவும், அவர்கள் இருக்குமிடத்தில் நாம் சேர்ந்திருப்பதும் அரிது. இரு கக்ஷிக்காரர்களும் ஒரே புருஷனிடத்தில் வந்து மோதிக்கொண்டபொழுது ஸமாதாநப்பேச்சுக்கு இடமிராது. ஆனால் எங்களுக்குள் பலத்த சண்டை போட்டுக்கொண்டு ஒருவரையொருவர் ஒழித்துவிடுவோம். ஒருவர் ஓரிடத்திலிருப்பதே மற்றொருவர் அதே இடத்திலிருக்க விரோதமாகும். இந்நிலையில் இருவரும் சேர்ந்து எப்படி ஒருவரிடத்தில் வாழ்வதுகூடும்?

“ஸதஸத்த்வ விருத்தாநாம் ஸத்ருசேவாவஸாயக:
க்ஷயங்காரம் ப்ரதீகார: கல்பகோடிப்ரதைரபி”
“கல்பிதயிகரணே ஸாவதந்த:
ஸாதந நயீஹதி வய்யூவாத கஸ்வம் ॥”

எதிரிகள் ஸத்வமில்லாத அபாவ ஸ்வரூபர்கள். நாம் ஸத்வமுள்ள பாவ ஸ்வரூபர்கள். அல்லது நாம் ஸத்வகுண மில்லாமல் ஸத்வாபாவமான ரஜோ குண தமோகுண முடையவர்கள். அவர்கள் ஸத்வகுணமுடைய ஸத்துக்கள். ஒரு கக்ஷிக்கு ஸத்வமுளது. இன்னொரு கக்ஷிக்கு ஸத்வமில்லை. ஸதஸத்துக்களும் ஸத்வாஸத்வங்களும் எப்படி ஒரே வஸ்துவில் சேரும்? ஸதஸத் அநிர்வசநீயம் என்று ஸதஸத்துக்களைச் சேர்த்து இப்படியும் அப்படியும் சொல்லமுடியாதென்று சொன்னு பொருவர். இவைகளை நான்கு கோடிகள் சொலலி, அதிலும் நீங்கியது தத்வம் என்றார் மாத்யமிகரென்றும் பௌத்தர்கள். ஏழு கோடிகள் சொன்னார்கள் ஜைநர்கள். ஒரே அதிகரணத்தில் விரோதி கல்பங்கள் எப்படி ஸம்பவிக்கும் என்று ஸூத்ரகாரர் ஜைந மதஸ்தர்களைக் கேட்டிருக்கிறார். கல்பகோடி சதங்கள் கடந்தாலும் ஸத்வாஸத்வங்களுக்கு விரோதத்தை எப்படிப பரிஹரிக்கக்கூடும்? எப்படி அவைகளை ஒன்று சேர்க்க முடியும்? மேலே சொன்ன வாதிகளைப்போல் மூன்று நான்கு ஏழு கோடிகளன்றியில் இன்னும் நூற்றுக்கணக்கான ப்ரகார கோடிகள் சொன்னாலும் இந்த விரோதம் நீங்கமாட்டாது என்றும் பாவம். ‘அதக்ஷோடி’ ‘ஸப்தபங்கீ’ என்று சொல்லுவதில் உள்ள ‘கோடி’ சப்தமும் ‘பங்கீ’ என்பதற்குப் பர்யாயமான ‘கல்ப’ சப்தமும் இங்கே கல்பகோடி என்பதால் குறிக்கப் படுகிறதென்றும் சொல்லலாம். நூற்றுக்கணக்கான இப்படிக் கொத்த கல்பகோடிகள் அல்லது ப்ரகார கோடிகள் பெருக்கினாலும் விரோத பரிஹாரம் ஸித்திக்காது. ஒரே ஆச்ரயத்தில் விரோதிகளான நாங்கள் போட்டி போட்டுக்கொண்டு விழுகிறோம். அப்படி விரோதிகளான நாங்கள் விழுகையில் ஒருவரை மற்றொருவர் கொன்றுவிட்டுத்தான் அந்த ஆச்ரயத்தில் நுழைந்து குடியிருக்கலாம். எங்களுக்குள் தவறாத ஸம்பந்தம் பிறவியால் மட்டும் ஏற்பட்டதே யொழிய ஒருவரை யொருவர் கொலை செய்து கொள்கிறதென்கிற வத்ய காதகத்வ ஸம்பந்தந்தான் நிலையாயுள்ளது. நாங்கள் அர்த்தகாம பரர்கள்; அவர்கள் நாராயண பரர்கள். நாங்கள் இந்த்ரியங்களின் கிங்கரர்கள்; அவர்கள் விஷ்ணுவின் கிங்கரர்கள். எங்கள் யஜமாநன் வேறு; அவர்கள் யஜமாநன் வேறு. எங்கள் ப்ராப்யம் வேறு; அவர்கள் ப்ராப்யம் வேறு. எங்களுக்குள் ஒருவருக்கொருவர் எப்படி ஸங்கதி ஏற்படும்? ஒருக்கால் அஸாத்யத்தையே ஸாதிக்கக்கூடுமென்றாலும் நம் யஜமாநன் மஹாமோஹன் எப்படி ராஜியை ஸஹிப்பார்? உத்தம ரணவீரனான

நான் ஸமாதாநத்தை ஒப்புக்கொள்வேனா? புலி பசித்தாலும் புல்லைத் தின்னுமா? புல் தின்னுவதென்பது பசுவுக்கன்றோ லக்ஷணம்? எதிரிகள் பசுப்போல் ஸாதுக்கள்; சக்தியில்லாதவர்கள். தோற்றுப்போன சத்ருக்கள் ஜயித்தவர் முன் புற்கவ்வுவது வழக்கம். நாம் ராஜி பண்ணினாலென்ன தோற்றாலென்ன? என்கிறான்.

இதை யெல்லாம் கேட்டு ரதி, ‘கிரம்பவும் பலமுடைய மஹாமோஹன் முதலியவர்களை வேரறுக்க எதிரிகள் என்ன உபாயம் ஆலோசித்திருக்கிறார்கள்?’ என்று கேட்கிறாள். அந்த ராஜ ரஹஸ்யத்தைப் பெண்பிள்ளையாகிய ரதிக்கு வெளிப்படுத்தக்கூடாதென்று மந்மதன் ஆக்ஷேபிக்க, அவள் தன் பேரிலும் தோழனான வஸந்தன் பேரிலும் ஆணையிட்டுக் கேட்கிறாள். ‘மாவிதொஸி ஊஉ வ்ராணை: ஸீதயா ஜெவ ஜுஷ்ண’ என்பதுபோல் இங்கே ஆணையிடுவது. எதிரிகளுடைய மந்த்ராலோசனையை நாம் வெளிப்படுத்துவதுதான் ந்யாயம் என்று வஸந்தன் சொல்ல, மந்மதன் அந்த ரஹஸ்யத்தை உரைக்கிறான். உபநிஷத்தின் ரஹஸ்யம் இங்கே சத்ருக்களின் ரஹஸ்யமெனப்படுகிறது. நிவ்ருத்தி என்கிற ஒழிவு தர்மமாம். கஷ்டப்பட்டுச் செய்வதையெல்லாம் தான் செய்யவே யில்லையென்று நினைக்கவேணுமாம். தன்னுடைய கர்த்ருத்வத்தை மறுக்கவேணுமாம். குலத்தையே அபிசார ப்ரயோகத்தா லழிக்கவேணுமாம். ச்யேந யாகம் என்பதை அபிசாரமென்று சொல்லுவார்கள். எப்படிப் பருந்தானது தன்னுடைய லக்ஷ்யமான ஜந்துவின் பேரில் பாய்ந்து கொல்லுமோ அப்படி அபிசார யாகம் சத்ருவைக் கொல்லுமாதலால் அதற்கு ச்யேநயாக மென்று பெயர். எப்படிப் பருந்தும் கொக்கும் தம்முடைய லக்ஷ்யத்தை மிகவும் அவதானத்தோடு இலக்குவைத்துக்கொண்டு பிறகு கைப்பற்றுமோ, அப்படி யிவர்கள் ப்ரஹ்மத்தை இலக்குவைத்துப் பிடிப்பார்களாம். இவர்கள் மநோரத மாத்ரத்தில் ஸமர்த்தர்கள். இவர்களுக்குக் கார்ய மொன்றுமில்லை. ‘கார்யமோ வீர்யமோ’ என்று சொல்வது ப்ரஸித்தம் ‘தஸ்ய கார்யம் ந வித்யதே’ என்று அவர்களே சொல்லுகிறார்கள். நைஷ்கர்ம்ய மென்னும் சோம்பலைதான் வேணுமாம். ப்ரியத்தை அடைந்தாலும் ப்ரஹர்ஷப்படக் கூடாதாம். அப்ரியம் வந்தாலும் அழக் கூடாதாம். துக்கத்தை ஸுகத்தோடொன்றாப் பார்க்கவேணுமாம். விபத்துக்களை வேணும் வேணுமென்று ப்ரார்த்திக்கவேணுமாம். பணம், பெண்டாட்டி, பிள்ளைகளையெல்லாம் விட்டுவிட்டுக் கடும்புலி வாழும் காட்டில் வாஸம் நன்று என்றும், தெருத் தெருவாய்ப் பிச்சை புகுவது சிறப்பென்றும், விபரீதமான கக்ஷிகளை சொல்லுகிறார்கள். தாங்கள் செய்யு மிந்த அபிசார கார்யத்தில் பராபக்தி என்கிற ப்ரம்ஹராக்ஷஸி பிறக்கப்போகிறாளாம். (ப்ரபோதசந்த்ரோதயத்தில் வித்யை யென்கி-

ராக்ஷஸி பிறப்பதாகச் சொல்லப்பட்டது. வித்யையை ப்ரஹ்ம ராக்ஷஸியென்று சொல்வது மிகப்பவும் உசிதம். இவள் ப்ரஹ்மத்தை அடைவிக்கும் ராக்ஷஸியாதலால் இவளை ப்ரஹ்ம ராக்ஷஸி யென்று சொல்வது ஏற்கும். இவள் செய்யும் ராக்ஷஸி சேஷ்டைகளைப் பத்தாவது அங்காப்பத்தில் இவளே பெருமை சொல்லிக்கொள்ளப் போகிறாள். இவள் பயங்கரமான தாடகை போன்ற ஆகாரமுடையவள். இவளைப் போதவிடி யென்கிற வெளிச்சமென்பார்கள். நாம் அவளைப் 'பைமாதி' யென்கிற அகண்டமான இரவென்று சொல்லுவோம். அநாதி காலமாய் எத்தனையோ கோடி கல்பங்களில் செய்த புண்யங்களை யழித்து அந்தப் புண்யங்களால் அடையவேண்டிய ஸுகங்களைத் தொலைப்பாளாம். இவள் ராக்ஷஸியா, வேறு?

“ പ്രവ്രജ്യാഖ്യാ വധൂട്ടാ വസതിവൃത്തീം ബിഭ്രതീ
ഹസ്തൈസ്ത്വാ വൃത്തിസൂരൈവ-ഉകാരണാ വൊരം തവമേവൃതെ ।
ദൃഷ്ടാ തൈര ജനാദ്യൈർ കണ്ണാ കാമീത തക്ഷംകാരം
കംക്ഷിത് കെടൂര കൊടികശൃംഗം (ഷിഷ്ടമൃഗസൌഷൃഷ്ടഃ) ॥

இந்த வித்யை என்கிற ப்ரஹ்ம ராக்ஷஸி 'புருஷனைப் பிடித்துக்கொள்வாள். அவளைப்பற்றி விசாரிப்போம். அவளுடைய வேஷம் தவவேடமாம். அவளுக்கு த்யாகம் என்கிற ஸந்யாஸம் லக்ஷணமாம். அவளுடைய தர்மம் துறவி தர்மமாம். அவள் பரிவ்ராஜிகையாம். ஸந்யாஸ தர்மத்துடனிருப்பவள் பரபுருஷனிடத்தில் நீங்காத ஆசையை வைக்கும் பதிவ்ரதையாம். பரபுருஷனிடத்தில் ஓயாத பதிவ்ரதா தர்மத்தை அநுஷ்டிப்பாளாம். ஸந்யாஸம் பூண்டவள் சொந்த புருஷனுடைய முகத்தையே பார்க்கக்கூடாது. பரபுருஷனிடத்தில் பதிவ்ரதா தர்மமென்று சொல்வதே வ்யாஹத மல்லவா? ஸ்த்ரீகளுக்கு ஸந்யாஸம் ந்யாயமா? இவள் நடத்தை முழுவதும் விபரீதம். இவள் தவஞ்செய்கிறாளாம். எல்லாக் கரணங்களையும் (அதாவது இந்த்ரியங்களையும்) அடக்கிவிட்டுக் காமமே யில்லாமலும் ஸுகமே யில்லாமலும் க்லேசமயமான தவத்தைச் செய்கிறாளாம். ஸாதகதமம் கரணம் என்று சொல்லுவர் சாஸ்த்ரஜ்ஞர்கள். இவள் காரணமே யில்லாமல் ஸாதிப்பாளாம். 'யோஷா ஜாரமிவ ப்ரியம்' என்று பரபுருஷனிடத்தில் ஆசையிருக்கவேண்டுமென்று பக்திக்கு த்ருஷ்டாந்தமாக வேதம் சொல்லுகிறது. ப்ரியமான பர்த்தாவினிடத்தில் ஸதீ என்கிற பதிவ்ரதைபோல வென்றும் சாஸ்த்ரம் சொல்லுகிறதாம். இவளிப்படிச் செய்யும் விபரீதமான ஆசாரணையினால் இவள் ஆசைநாயகன் இவளிடத்தில் இரங்குகிறனும். இவளாசை நாயகனை ஜாரன் ஜநார்த்தநனும். அவன் பிறப்பையே அழிப்பனும். அழிக்கும் தன்மையுடைய இவளுக்கு அழிப்பவன் ஏற்ற நாயகன். இந்த

ராக்ஷஸிக்கு உதவியாக யம கிங்கரன்போன்ற ஒரு கிங்கரனைப் பிறப்பிப்பானும். அந்தக் கிங்கரன் கோடி கைடபாஸுரர்களுடைய பலமுடையவனும். ஆயிரம் யானை பலமுள்ளவன் என்று சொல்லுவார்கள் துர்யோதநன் பீமஸேநன் முதலியவர்களை. இவன் கோடி கைடபாஸுர பலமுள்ள அஸுரனும். ராக்ஷஸிக்கு அஸுரன்தானே தகுந்த கிங்கரனுவான்?

இவ்வளவு சொல்லிவிட்டு, கடைசி வார்த்தைகளைச் சொல்லாமல் மந்மதன் வாயை மூடிக்கொள்ளவே, வஸந்தன் தன் மநஸ்ஸுக்குள்ளே அவன் ஸங்கல்ப ஸூர்யோதயன் என்றும், அந்த ச்லோகத்தின் கடைசி வார்த்தைகள் 'அவன் நம்மையெல்லாம் நிர்மூலநம் செய்பவனே' என்றும் சொல்லிக்கொண்டு, ரதி பயப்படுவாளே என்று பயந்து, 'மிச்சம் சொல்வதற்கே கஷ்டமானது' என்று ச்லோகத்தைப் பூரணம் செய்கிறான். இதைக் கேட்டு ரதி பயந்து நடுக்கத்துடன் 'காப்பாற்றும் காப்பாற்றும்' என்று கத்திக்கொண்டு மந்மதனைக் கெட்டியாய்க் கட்டிக்கொள்ளுகிறாள், 'அல்ப லாபம் தந்யனுனேன், பரம புருஷார்த்தம் கிடைத்தது.

ജന്ത വധൂയഹംമെ ദൃക്ഷമാലാവക്ഷേപ
ഉഷിതന്ദ്രിയവെശേ ശോഭമലവിദോഷമെതല ।
സംശിതവസിതംഹെ ശരംവൃതം കാതരാക്ഷ്യാ
സ്തജതി യാമമേ-ഭിജ്ഞാലംഗയൊരംതരാത്മാ ॥

கைவளை நெரிந்தா லென்ன? ஹாரமணிகள் நொறுங்கினு லென்ன? இடமென்று பயந்தா லணைத்ததால் வளைகளையும், ஹாரங்களையும் கழற்ற அவகாசமில்லை. இருந்த துக்கமெல்லா மெங்கேயோ ஓடிப்போகவில்லையா? மெய்ம் மறக்கும்படி ஒரு மோஹ மயமான ஸந்தோஷ முண்டாகவில்லையா? 'குஹாநுதேந ஜயதாம் ஸுதாராதலோதி' என்று ரஸஜ்ஞர்கள் சொல்லுவார்கள். இம்மாதிரியான ஆலிங்கநத்தின் விஷயத்தில் இரண்டெம்புக்கும் அத்வைதமே அநுபவாரூடமாகிறது. 'ததஜ்ஞா ஹைதம் வாரசோய-உநுஷ்டிஃ' என்று நாமும் சொல்லலாம்' என்று மந்மதன் மனத்திற்குள் சொல்லிக்கொள்ளுகிறான்.

மோஹத்தை யடைந்திருக்கும் ரதியை 'பயப்படாதே! மனத்தைத் தேற்றிக்கொள்; நம்முடைய அரசனின் பெருஞ் சேனைக்கு அதி

பதியான போர் வீரனாகிய என்னுடைய உயிருக்குயிரான நீ இப்படி பயந்து மோஹித்தால், நம்முடைய அரசன் கதி என்ன ஆகும்? நைகமிகத் தெருக்களில் நடக்கிறவர்களின் வார்த்தை. நைகமிகர்கள் என்பது வைதிகர்களையும் வர்த்தகர்களையும் சொல்லும். நைகமிக ரத்யை என்றால் வேதமார்க்க மென்றும் கடைத்தெரு வென்று மர்த்தமாகும். இது கடைத்தெரு வார்த்தை. வைதிகச் சாந்தஸரின் வார்த்தை. இதுகட்டுக் கதை. இந்த்ரஜால சக்தியால் ஒரு பொய்யான கந்தர்வ நகரத்தைக் காட்டி மறைப்பதுபோல் இது வெறும் கற்பனையான கட்டுக்கதை. குருவிடத்தில் உபதேசம் பெற்றுக் கொண்டு பர பக்தியை அநுஷ்டாநம் செய்யவேண்டு மென்றல்லவா அவர்கள் கொள்கை. சந்த்ரன் ஸுதாகரன். அவன் தன் கிரணங்களால் அம்ருதத்தைப் பெருக்கிறவன். நிரம்பவும் அவதாதமான ப்ரபையையுடையவன். அவன் குருகுல வாஸம் பண்ணின கதையும், அவன் குருவும் ஸுரர்களுக்கெல்லாம் குருவுமான ப்ருஹஸ்பதி குருகுல வாஸம் பண்ணின கதையும் உனக்குத் தெரியாதா? அவ்விருவரும் குரு தல்பகராக இல்லையா? என் வில்லை வளைத்து, வண்டுகள் ரீங்காரஞ் செய்கையில், விரக்தி வீட்டு ரேழியில் யாருடைய கண்கள் ஆவலுடன் செல்லும்? விரக்தி தேவியை யார் கண்ணெடுத்துப் பார்ப்பார்? மந்த்ரிகளான நம்மால் ஏற்படும் பலம் இருக்கட்டும். நம்முடைய யஜமானுடைய சொந்த பலம் போதாதா? எனக்குப் பஞ்சாயுதங்கள் இருப்பதால் பரமபுருஷனோடு ஸாம்யம் சொன்னேன். நம்முடைய யஜமானுக்கு அவரைப்போல் நான்கு வ்யூஹங்களுண்டு. இதனால் விக்ரஹங்களிலேயே ஸாம்ய மேற்படுகிறது. ப்ரமாதம், ஆலஸ்யம், நித்ரை, ஸ்ம்ருதி என்கிற வ்யூஹங்கள் உள்ளன. இன்னம் எத்தனையோ விக்ரஹங்கள் அவருக்குண்டு. ப்ரமாதம், ஆலஸ்யம் இவைகள் யோகத்திற்கு விக்ஷேபங்களென்றும் அந்தராயங்களென்றும் யோகஸூத்ரம். நித்ரையும், ஸ்ம்ருதியும் யோக விரோதியான சித்த வ்ருத்திகள். நம் யஜமானனை ஜயிப்பவரில்லை.'

ஸ்ரீ:

ஸ்ரீ ராமாநுஜாசார்யரும் ஸ்ரீகண்டாசார்யரும்.

[ஸ்ரீ. உப. வித்வாந், தோட்டாலம் வேணுகோபாலாசார்யர்]

(ஸஞ்சிகை 7, பக்கம் 197 தொடர்ச்சி.)

அவ்வாறே 'नारायण परं ब्रह्म' என்கிற வாக்யத்தை ஸமாநாதிகரணமாக அங்கீகரித்து, 'परब्रह्मपरञ्ज्योतिश्शब्दाश्च नारायण एव व्यवतिष्ठन्ते' என்று ராமாநுஜர் சொன்னதைக் கண்டிக்க நினைத்தே, ஸ்ரீகண்டர், 'शब्दविशेषात्' என்கிற ஸூத்ராவதாரிகா பூர்வ பக்ஷத்தில் 'समष्टिपुरुषवाक्ये उदाहृतस्य ब्रह्मत्वस्य वाक्यस्य 'पादोऽस्य विश्वा भूतानि' इति निर्देशकांश जगदीशविषयत्व उच्यते। समष्टिपुरुषं दैवतं स भगवान् नारायण इति बोध्यते। स अयं नारायणः परं ब्रह्मेति ब्रह्मशब्देनोच्यते। कथमस्य तथाविधत्वान्तं प्रत्यगात्मवाचकत्वेन ... शब्दविशेषात् (1-2-5) என்று சொல்லி, ஸமாதாநத்தில், 'नारायण परं ब्रह्म इति शब्दविशेष एव नारायणात्परमिति ब्रह्म प्रतिवादयति। अतो नारायणात्परमेव परं ब्रह्म उपास्यम्' என்று 'नारायणात्परम्' என்று தத் புருஷ ஸமாஸமே சொல்லவேண்டு மென்கிறார். ஸமாநாதிகரண ஸமாஸமே ராமாநுஜாபிமத மென்பதை ஸ்ரீ கண்டரே, 'कर्मकर्तृव्यपदेशाच्च' (1—2—4) என்கிற ஸூத்ராவதாரிகா பூர்வ பக்ஷத்தில் 'नारायण एव विश्वतः परं ब्रह्म जीवान्तर्यामित्वेनोपास्यः' என்று வெளியிட்டிருக்கிறார். இப்படி ஸமாநாதிகரண ஸமாஸத்தை அநுவதித்துத் தத்புருஷ ஸமாஸத்தை வற்புறுத்துவதால், ஸ்ரீ கண்டர் ராமாநுஜர்வாசிகர் என்பது ஸ்பஷ்டம். ஆகையால் தான் இந்த வேதார்த்த ஸங்க்ரஹ வ்யாக்யாநத்தில் அவருக்கு ஸ்ரீ கண்டர் சொன்ன தத்புருஷ ஸமாஸ பக்ஷத்தைத் தூஷித்து, ராமாநுஜோக்தமான ஸமாநாதிகரண ஸமாஸ பக்ஷத்தை ஸ்தாபித்துக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு, 'नारायणपरं ब्रह्मतत्त्वं नारायणः पर इति केचिद्वैदिकाविदुषः ...' என்று தொடங்கி 'निष्कृष्टस्वरूपत्वात् प्रत्ययविषयत्वात् ... तत्पुरुषम्' என்கிற அளவாக ஸமாநாதிகரண ஸமாஸத்தை

ஸ்தாபிக்கிறார். இந்தத் தத்புருஷ ஸமாஸ பக்ஷம் கண்டனம் ராமாநுஜ ஹ்ருதயஸ்தமாயிருந்தால் அவருடைய க்ரந்தத்திலேயே இதற்கு ஏதாகிலும் ஒரு ஸமாதாநம் எழுதியிருக்கக்கூடும். மேற்கூறிய பங்க்தியிலிருக்கும் 'அவைதிகா:' என்கிற பதம் ஸ்ரீகண்டரைக் குறிக்கிறதென்பது உண்மையாக இருக்கலாம். அது ராமாநுஜ ஹ்ருதயஸ்தமா, அல்லது வ்யாக்யாதாவால் ஸ்வதந்த்ரமாகச் சொல்லப்பட்ட மேல் யுக்தியா வென்பதை விசாரிக்குங்கால், ராமாநுஜ ஹ்ருதயஸ்தம் தான் என்று சொல்வதற்கு ஆதாரமாக 'உபபாதயிதா ச வக்ஷ்யதே அத்ர வ்ருத்தி, ததா ஸம்க்ஷேபஸ்வவிசேஷாச்ச இதி' இத்யாதிகளைப்போல் வேதார்த்தஸங்க்ரஹ வ்யாக்யாநத்தில் யாதொரு சப்தமும் இல்லை. தத்வம் இவ்வாறிருக்க, இதை ராமாநுஜஹ்ருதயஸ்தமாகவே ஜிஜ்ஞாஸா பத்ரிகாதிபதி ஊஹித்தது மல்லாமல், 'நாராயண ஏவ ப்ரபஞ்ச' என்கிற இடத்திலிருக்கும் ஏவகாரத்தால் ஸ்ரீகண்டரால் அங்கீக்ருதமாகிய தத்புருஷ ஸமாஸ பக்ஷம் வ்யாவ்ருத்தமாகிறதென்றும் கூறியது யோசித்துச் சொன்னதாகமாட்டாது. அந்த ஏவகாரத்துக்கு வ்யாவர்த்யம் எதுவென்பது அக்ரந்தத்தைப் பூர்வோத்தர பராமர்சம் பண்ணிறுல் நன்கு விளங்கும்.

அப்படியே வேதார்த்த ஸங்க்ரஹத்தில் ராமாநுஜர் 'நிமித்தோபாதாநயோ ரைக்யம் ஸர்வஶ்ருதிஸித்தம் ஸகலோபநிஷத் ஸித்தம்' என்று ஸ்வபக்ஷத்தில் நிமித்தோபாதாநங்களுக்கு ஐக்யத்தை, 'ஜந்மாத்யஸ்ய யத:, ப்ரக்ருதிஶ்ச ப்ரதிஜ்ஞா த்ருஷ்டாந்தாநுபரோதாத்', ஸ ஏவ ஸர்வேஷாம் ப்ரகாஶக:, ப்ரஹ்மவநம் ப்ரஹ்ம ஸ வ்ருக்ஷ ஆஸீத், நதஸ்ய கஶ்சித், ஸர்வஸ்ய வஶீ ஸர்வஸ்ய' இத்யாதிகளால் ஸ்தாபித்து இவைகளுக்கு விருத்தமாக நிமித்தோபாதாநங்களுக்குப் பேதத்தை எவர்கள் அங்கீகரிக்கின்றார்களோ அவர்கள் வேதவிருத்தர்களானதால் அவைதிகர்கள் ஆவார்கள்; அதாவது வேதவிருத்தவாதிகள் வாதாநதிகாரிகள் என்பது கருத்து என்று நிமித்தோபாதாநபேதவாதிகளை அவைதிகர்களென்று தூஷித்திருக்கிறார். ஸ்ரீ கண்டரோ, பொதுவில் சைவர்கள் அப்படி அங்கீகரித்தபோதிலும் தாம் வைதிகராதலால் இதை ஸர்வாத்மநா கண்டிக்க முடியாமல் சைவத்வ ஸாமாந்யத்தால் தம் மதத்திலும் ப்ரஸக்தமாகும் இத்தூஷணம் தம் மதத்திலில்லை யென்று மாத்ரம் ஸமாதாநம் சொல்லுகிறார்.

ப்ரக்ருத்யதிகரணத்தில் "ஶாயாம் ச ப்ரக்ருதிம் வித்யாந்மாயிநம் து மஹேஶ்வரம், தஸ்யாவயவபூதைஸ்து வ்யாப்தம் ஸர்வமிதம் ஜகத் இதி ஶ்ருதிர்ணாயாயா: ஸகல ப்ரக்ருதித்வம் தத்விஶிஷ்டத்வம் மஹேஶ்வரஸ்ய ச வ்யவஹாரோ தைதாம்ஶஹேதுக தஸ்ய நிஷ்கம்பஸ்ய ஸமவேத ஸாக்ஷ்யமுபயா

யாம் ப்ரபஞ்ச ஸம்ஜ்ஞகே ஸகல ஜகதுபாதாநத்வமப்யஸ்தி। யதாசேதந ஶரீரஸ்ய ஜீவஸ்ய பாலத்வ யுவத்வாதி ஸம்பவதி ஶுத்தஸ்ய ததா ந கேவலம் மாயயா ஜகதுபாதாநத்வம் மஹேஶ்வரஸ்ய கிந்து சிதசிச்சரீரிண: கேவலஸ்ய சிதசித்விஶிஷ்டாயா: பரமேஶ்வரஸ்ய ஸகல சேதநாசேதந ப்ரக்ருதி ப்ரபஞ்சோபாதாநத்வம் ஸம்பவதி। தத்ர சோபாதீஶ்வரஸ்ய ஜகத் ப்ரபஞ்சோபாதாநத்வம்। ததா ச ஶ்ருதிரீஶ்வரஸ்ய ப்ரபஞ்சாத்மகத்வமுபபாதயந்தீ ப்ரபஞ்சோபாதாநஸ்ய இதி। தத: ஸூக்ஷ்மசிதசித்விஶிஷ்ட: பரமேஶ்வர: காரணம் கார்யம் ச ஸ்தூலசிதசித்விஶிஷ்ட இதி" (ஸ்ரீகண்ட—570) என்று இருக்கிறது. சிவார்க்கமணி தீபிகையில் 'ஸூக்ஷ்மசிதசித்ப்ரகாரஸ்யாபி பரமேஶ்வரஸ்ய ஜகதுபாதாநத்வம் ஸர்வஜ்ஞத்வாதிகம் ஸ்வரூபோபாதாநத்வம் சாபரிணாமித்வம் ஸம்பவதி இதி।' என்றிருக்கிறது. அப்படியே அநுபபத்யதிகரண ஸ்ரீ கண்ட பாஷ்யத்தில் 'ஸஹஸ்ரஶீர்ஷத்வாதி விஶிஷ்டப்ரபஞ்சாத்மகேந ஜகதுபாதாநத்வாத்' என்றும் சிவார்க்கமணி தீபிகையில் ஸஹஸ்ரஶீர்ஷத்வாதி விஶிஷ்ட நாராயணஸ்ய ப்ரபஞ்சாத்மகஸ்ய பரமேஶ்வரஸ்ய ஜகதுபாதாநதாயா: ப்ரக்ருத்யதிகரணே ஸமர்த்திதத்வாத் தத்ப்ரபஞ்சோபாதாநத்வ உதாஹரணம் ப்ரஹ்மண இதி' என்றிருக்கிறது. அவ்வாறே கார்யாதிகரணத்தில் "ஸ்வாத்மாஸ்வரூப ஸாக்ஷாத் நாராயணாப்ரஹ்மணஸ்யாபி ஸகல கார்யரூப ப்ரபஞ்சஸ்ய பரஸாக்ஷாத் உபாதானத்வம் நிமித்தத்வம் ஸாக்ஷாத் ப்ரஹ்ம ஸவிஶேஷ நிர்விகல்பம்।" என்றும் காணப்படுகிறது. இதனால் நிமித்தோபாதாநங்களுக்குப் பரஸ்பரம் ஸ்வல்ப பேத மிருந்த போதிலும் 'ஸம்கல்பவிஶேஷ விஶிஷ்டவேஷேண நிமித்தத்வம் ஸூக்ஷ்மசிதசித் விஶிஷ்டவேஷேண உபாதாநத்வம்' என்று விசிஷ்டாத்வைதத்தில் ஒரே ப்ரஹ்மத்துக்கு நிமித்தத்வமும் உபாதாநத்வமும் அங்கீகரித்தபடி, இங்கும் ஒரே சிவனுக்கு உபாதாநத்வம் ஸ்வாம்ச பூத நாராயண த்வாரமாயும், நிமித்தத்வம் ஸாக்ஷாத்தாயும் அங்கீகரிக்கலா மென்பது கருத்து என்பதாகிறது. இப்படி யிருக்க இந்த ஸ்ரீகண்டரை நிமித்தோபாதாந பேதவாதி என்று எவ்வாறு சொல்வது? ஆகையால் நிமித்தோபாதாந பேதவாதியை அவைதிக னென்று ராமாநுஜர் தூஷித்த பிறகு, சைவத்வ ஸாமாந்யாத் தனக்கும் ப்ரஸக்தமாகக் கூடிய அவைதிகத்வத்தைப் பரிஹரித்துக் கொள்ளவே 'நாம் பேதவாதியல்லோம்' என்று ஸ்ரீகண்டர் ஸ்தாபித்துக்கொள்ள வேண்டியதாயிற்று, ராமாநுஜர் எடுத்த பேதவாதிகள் ஸர்வாத்மநா நிமித்தோபாதாநங்களைப் பின்ன பின்னங்களாகச்சொல்லக் கூடியவர்கள். அத ஏவ அவ்விடத்திய வ்யாக்யாநத்தில் "அவைதிக இவ [illegible] த்ருஶ்யதே। ப்ரக்ருதிருபாதாநம் ஈஶ்வர: நிமித்தம் [illegible]

186796.

